பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி - சென்னை - 4

14.08.2025 6.45

வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- நாட்டின் 79வது சுதந்திர தினத்தையொட்டி குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று இரவு 7 மணிக்கு நாட்டு மக்களுக்கு உரையாற்றுகிறார்.
- நாட்டில் சூரியசக்தி மின் உற்பத்தி 100 ஜிகாவாட் திறனை எட்டியுள்ளதற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.
- தமிழகத்தில் பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து 6 நாடுகளின் துணைத் தூதர்களுடன் துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் கலந்துரையாடினார்.
- தமிழகத்தில் கடந்த 4 ஆண்டுகளில் ஒரு கோடியே 83 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.
- சென்னை கிராண்ட் மாஸ்டர் செஸ் போட்டியின் மாஸ்டர்ஸ் பிரிவில் 7வது சுற்று முடிவில் இந்தியாவின் அர்ஜுன் எரிகைசி, கார்த்திகேயன் முரளி ஆகியோர் தலா 4 புள்ளிகள் பெற்றுள்ளனர்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

நாட்டின் 79வது சுதந்திர தினத்தையொட்டி குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று இரவு 7 மணிக்கு நாட்டு மக்களுக்கு உரையாற்றுகிறார்.

குடியரசுத்தலைவரின் உரை ஆகாஷ்வாணி மற்றும் தூர்தர்ஷனின் அனைத்து அலைவரிசைகளிலும் ஹிந்தியிலும், ஆங்கிலத்திலும் ஒலிபரப்பாகிறது.

அதைத் தொடர்ந்து குடியரசுத்தலைவரின் உரை, மாநில மொழிகளில் தூர்தர்ஷன் தொலைக்காட்சியின் பிராந்திய அலைவரிசைகளில் ஒலிபரப்பாக உள்ளது.

அத்துடன் குடியரசுத்தலைவரின் உரை ஆகாஷ்வாணியின் பிராந்திய அலைவரிகைளில் இரவு மணி 9.30க்கு மாநில மொழிகளில் ஒலிபரப்பாகும்.

<<<<>>>>

நாட்டில் சூரியசக்தி மின் உற்பத்தி 100 ஜிகாவாட் திறனை அடைந்ததற்காக பிரதமர் திரு. நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷியின் சமூக வலைதள பதிவு குறித்து சுட்டிக்காட்டியுள்ள பிரதமர், தூய்மை எரிசக்தியை பிரபலப்படுத்துவதற்கான முயற்சிகளை பாராட்டுவதாகக் கூறியுள்ளார்.

இது சுயசார்பை ஒட்டிய மற்றொரு மைல்கல் என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

சுதந்திர தினத்தையொட்டி நாடு முழுவதும் இல்லந்தோறும் தேசியக் கொடி பேரணி நடைபெற்று வருகிறது.

சென்னை ஆவடியில் இன்று காலை மணி 9.30க்கும், ராயபுரம் ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் முற்பகல் மணி 11.30க்கும் இப்பேரணி தொடங்குகிறது.

இதில் மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் சிறப்பு விருந்தினராக கலந்துகொள்கிறார்.

<<<<>>>>

தமிழகத்தில் பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து 6 நாடுகளின் துணைத் தூதர்களுடன் துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் கலந்துரையாடினார்.

இதுகுறித்து மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இந்த சந்திப்பின்போது விளையாட்டு, வர்த்தகம், திறன் மேம்பாடு மற்றும் கல்வித்

துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து விவாதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பில் அமெரிக்க துணைத் தூதர் திரு. கிறிஸ்டோஃபர் டபிள்யூ ஹாட்ஜஸ், பிரிட்டன் துணைத் தூதர் திருமதி ஹலிமா ஹாலந்த், ஆஸ்திரேலிய துணைத் தூதர் திருமதி சிலாய் ஜாக்கி, ஜெர்மன் துணைத் தூதர் திரு. மைக்கேல் ஹாஸ்பர், பிரான்ஸ் துணைத் தூதர் கிறிஸ்டோஃப் பிரமௌல்லே, சிங்கப்பூர் துணைத் தூதர் திரு. எட்கர் பாங் ஆகியோர் பங்கேற்றதாக மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் கடந்த 4 ஆண்டுகளில் ஒன்று புள்ளி எட்டு மூன்று கோடி மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாக மாநில உணவுத்துறை அமைச்சர் திரு. சக்கரபாணி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் இதன்மூலம் விவசாயிகளுக்கு 40 ஆயிரத்து 440 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளதாகவும், இதில் மாநில அரசின் ஊக்கத்தொகையாக ஆயிரத்து 816 கோடி வழங்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

நடப்பு நெல் கொள்முதல் பருவத்தில் இதுவரை 46 புள்ளி 5 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடப்பாண்டும் செப்டம்பர் மாதம் முதல் நெல் கொள்முதல் செய்ய மத்திய அரசு அனுமதி அளித்துள்ளதாகவும் மாநில அரசின் செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

<<<<>>>>

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் இன்று முதல் 18ஆம் தேதி வரை ஆடி கிருத்திகை தெப்பத் திருவிழா நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

இதையொட்டி அங்கு கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு. விவேகானந்த சுக்லா தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் மாவட்ட, மண்டல மற்றும் மாநில அளவில் பங்கேற்பதற்கான இணையதள முன்பதிவிற்கான கால அவகாசம் இம்மாதம் 20ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக இப்பதிவிற்கான கடைசி நாள், நாளை மறுநாள் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இதுதொடர்பான தகவல்களை 9 5 1 4 0 0 0 7 7 7 என்ற எண்ணில் தகவல் தொடர்பு மையத்தில் அறிந்துகொள்ளலாம் என்றும், இப்போட்டியில் பங்கேற்க இதுவரை 10 லட்சம் போட்டியாளர்கள் முன்பதிவு செய்துள்ளதாகவும் மாநில விளையாட்டுத்துறை கூறியுள்ளது.

**<<<<>>>>**

நீலகிரி மாவட்டம் குன்னூர் அருகே உள்ள காட்டேரி பூங்காவில் இரண்டாவது பருவத்திற்காக மலர் நாற்றுகள் நடவு செய்யும் பணி தொடங்கியுள்ளது.

இதில் சுமார் ஒன்றரை லட்சம் மலர் நாற்றுகள் நடப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**<<<<>>>>**

*இருவரிச் செய்திகள்*

ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புடின் உடன் நடைபெற உள்ள சந்திப்பு தொடர்பாக யுக்ரைன் அதிபர் திரு. வோலோடிமிர் ஜெலன்ஸ்கியும், ஐரோப்பிய நாடுகளின் தலைவர்களும் அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப்புடன் காணொலி காட்சி வாயிலாக விவாதித்தனர்.

**<<<<>>>>**

புதுதில்லி வந்துள்ள சிங்கப்பூர் துணைப் பிரதமர் திரு. கான் கிம் யோங் தலைமையிலான குழுவினர் குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்முவை சந்தித்துப் பேசினர்.

**<<<<>>>>**

ஜவுளித்துறை ஏற்றுமதி 2030ஆம் ஆண்டுக்குள் 100 பில்லியன் டாலர் என்ற இலக்கை எட்டும் என்று மத்திய ஜவுளித்துறை அமைச்சர் திரு. கிரிராஜ் சிங் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

**<<<<>>>>**

அவசர நிலையின்போது சிறையில் அடைக்கப்பட்ட அரசியல் கைதிகளுக்கான ஓய்வூதியத் தொகையை 7 ஆயிரத்து 500 ரூபாயில் இருந்து 15 ஆயிரம் ரூபாயாக பீஹார் அரசு உயர்த்தியுள்ளது.

<<<<>>>>

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உணவக உரிமையாளர்கள் சிறந்த உணவகத்திற்கான விருதுகளுக்கு இம்மாதம் 25ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்குமாறு ஆட்சியர் திரு. தினேஷ்குமார் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

திருப்பத்தூர் மாவட்டத்தில் காவல்துறை சார்பில் நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர் கூட்டத்தில் பெறப்பட்ட 47 மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று காவல்துறை கண்காணிப்பாளர் திருமதி ஷியாமளா தேவி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தூத்துக்குடி மாவட்டம் ஈராச்சி கிராமத்தில் இருப்பு சான்றிதழ் வழங்க லஞ்சம் பெற்ற கிராம நிர்வாக அலுவலர் கைது செய்யப்பட்டார்.

<<<<>>>>

தஞ்சாவூர் மாவட்டத்தில் மாதாகோட்டை மேம்பாலம் அருகில் நேற்று மாலை நேரிட்ட சாலை விபத்தில் உயிரிழந்த 3 பேரின் குடும்பத்தினருக்கு தலா 3 லட்சம் ரூபாய் நிவாரண நிதி வழங்கப்படும் என்று மாநில அரசு அறிவித்துள்ளது.

<<<<>>>>

ராணிப்பேட்டை மாவட்டம் மேல்புதுப்பேட்டையில் சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்த வழக்கில் தொழிலாளி ஒருவருக்கு 20 ஆண்டு சிறை தண்டனை விதித்து மாவட்ட நீதிபதி செல்வம் உத்தரவிட்டுள்ளார்.

<<<<>>>>

சிறு மற்றும் நடுத்தர தொழில்துறை நிறுவனங்களின் உரிமையாளர்கள் மற்றும் சுய தொழில் புரிபவர்களுக்கு சரக்கு மற்றும் சேவை வரி குறித்த பயிற்சி இம்மாதம் 20 மற்றும் 21ஆம் தேதிகளில் சென்னை ஈக்காட்டுத்தாங்கலில் உள்ள தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

சென்னை கிராண்ட் மாஸ்டர் செஸ் போட்டியின் மாஸ்டர்ஸ் பிரிவில் 7வது சுற்று முடிவில் இந்தியாவின் அர்ஜுன் எரிகைசி, கார்த்திகேயன் முரளி ஆகியோர் தலா 4 புள்ளிகள் பெற்றுள்ளனர்.

சேலஞ்சர்ஸ் பிரிவில் இந்தியாவின் பிரனேஷ் ஐந்தரை புள்ளிகளையும், அபிமன்யு புரானிக் ஐந்து புள்ளிகளையும் பெற்றுள்ளனர்.

மாஸ்டர்ஸ் பிரிவின் 7வது சுற்று ஆட்டத்தில் அர்ஜுன் எரிகைசி - நெதர்லாந்தின் அனீஸ் கிரி இடையேயான போட்டி டிராவில் முடிவடைந்தது.

சேலஞ்சர்ஸ் பிரிவின் 7வது சுற்றுப் போட்டியில் இந்தியாவின் ஆர்யன் சோப்ரா - அபிமன்யு புரானிக் இடையேயான ஆட்டம் டிராவில் முடிவடைந்தது.

**<<<<>>>>**